**அனுப்புநர்**

திரு.சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 012923 /எச்1 /2021** **நாள் : 29.09.2021**

**ஐயா/அம்மையீர்**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வு, ஆகஸ்ட் 2021 – விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II – விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வது தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

**பார்வை:** அரசுத் தேர்வுகள் இயக்கக செய்திக்குறிப்பு நாள்:28.09.2021.

-----

ஆகஸ்ட் 2021, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு தொடர்பாக விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் **01.10.2021 முதல் 05.10.2021** வரையிலான நாட்களில், தங்களது விடைத்தாள் நகல்களை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்ய பார்வையில் கண்டுள்ள செய்திக்குறிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அச்செய்திக்குறிப்பில் விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்யும் தனித்தேர்வர்கள், மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II-க்கு விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கான விண்ணப்பத்தினை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து **04.10.2021 காலை 10.00 மணி முதல் 05.10.2021 மாலை 05.00 மணி வரை** சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்தில் உரிய கட்டணத் தொகையை விண்ணப்பத்தோடு சேர்த்து ஒப்படைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதற்கேற்ப அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது மாவட்டத்தில் உள்ள தனித்தேர்வர்களிடமிருந்து மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II விண்ணப்பங்களைப் பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்கள் மட்டுமே, மறுமதிப்பீடு (RV) / மறுகூட்டலுக்கு (RT-II) விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவார்கள்.
2. தேர்வர்கள் விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்தபின், அதே இணையதளத்தில் மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கான (RT-II) விண்ணப்பத்தையும் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்திலுள்ள கலங்களை பூர்த்தி செய்து கீழ்க்காணும் கட்டணத் தொகையோடு சேர்த்து அவ்விண்ணப்பத்தை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

2.....

**<u>மறுமதிப்பீடு</u>**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.505/– |

**<u>மறுகூட்டல்–II</u>**

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | – ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.205/– |

3. முதன்மைக் கல்வி அலுவலகத்தில், தனித்தேர்வர்களிடமிருந்து மேற்கண்டவாறு விண்ணப்பங்களை பெற்றவுடன் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களுக்கான USER ID & PASSWORD-ஐ பயன்படுத்தி **04.10.2021 காலை 10.00 மணி முதல் 05.10.2021 மாலை 05.45 மணி வரை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.** ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பதிவேற்றம் செய்து, அதற்கான ஒப்புகைச் சீட்டினை சம்பந்தப்பட்ட தேர்வர்களிடம் வழங்குதல் வேண்டும்.

4. 05.10.2021 அன்று மாலை 6.00 மணியளவில் மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II-க்கு விண்ணப்பித்தத் தனித்தேர்வர்களின் விவரங்களை (Summary Report) பதிவிறக்கம் செய்தல் வேண்டும். பின்னர், விண்ணப்பத்திற்கென்று பெறப்பட்ட தொகையினை Director of Government Examinations, Chennai–6 என்ற பெயரில் தனி கேட்பு வரைவோலையாக (Demand Draft) எடுத்து, அவற்றுடன் மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலையும் (Summary Report), முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பமிடப்பட்ட (with Sign) கீழ்க்காணும் சான்றிதழையும் இணைத்து திரு.ச.சீனிவாசன், துணை இயக்குநர் (பொது), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக 08.10.2021–க்குள் அனுப்பி வைத்திட வேண்டும்.

**<u>சான்றிதழ்</u>**

மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II-க்கு விண்ணப்பித்த தனித்தேர்வர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**முதன்மைக் கல்வி அலுவலர்**
(அலுவலக முத்திரை)

**ஒம்./–**
**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டஅரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர்கள். } –தகவலுக்காக
3. தொழில்நுட்பப் பிரிவு (அலுவலகம்)